සේවයට කැපවෙමු - පුරවැසි අයිතීන් සුරකිමු
அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவோம் - பிரஜைகளின் உரிமைகளைக் காப்போம்
LETS DEDICATE TO SERVICE FOR PROTECTING THE RIGHTS OF CITIZEN

# පුරවැසි/සේවාලාභී ප්‍රඥප්තිය
# பிரஜைகள் சேவை பெறுனர் பட்டயம்
# CITIZENS CLIENT CHARTER



## ජාතික යොවුන් සේනාංකය
## தேசிய இளைஞர் படையணி
## National Youth Corps

විනය
ஒழுக்கம்
DESCIPLINE

නායකත්වය
தலைமைத்துவம்
LEADERSHIP


පෞරුෂය
ஆளுமை
PERSONALITY

# தேசிய இளைஞர் படையணி


“தாங்கள் தற்போது வருகை தந்திருப்பது அபிமானம்மிக்க வலுவான இளைஞர் யுவதிகளை நாட்டுக்கு வழங்குவதற்காக தயாராக உள்ள ஒரேயொரு அரசாங்க நிறுவன வளாகத்திற்காகும்”

## எமது நோக்கு

"உலகளாவிய சமூகத்தோடு இணைந்து செல்லும் அபிமானம்மிக்க, நடுநிலையான இலங்கையின் இளைய சமுதாயத்தை உருவாக்குதல்"



## எமது செயற்பணி



"புதிய கலாசாரத்திற்கான சமூக அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கிய வண்ணம் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முன்னணி சேவை வழங்கும் நிறுவனமாக வாழ்க்கைத் திறன்களை சிறப்பாகவும் நிலைபேறாகவும் வழங்கி இலக்கிடப்பட்ட சமுதாயத்தை வலுவூட்டி தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்"

## இளைஞர் படையணியின் விழுமியங்கள்

- ஒழுக்கம்
- தலைமைத்துவம்
- ஆளுமை
- பொறுப்புடமை
- வகைகூறல்
- விடய நிபுணத்துவம்
- வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன்
- தரம்
- வழிநடாத்தல்
- தொடர்ச்சியான பயிற்சி மற்றும் இற்றைப்படுத்தல்

உயர் விழுமியங்களுக்கு மதிப்பளித்து சேவை வழங்குவதற்கு தேசிய இளைஞர் படையணியின் ஆளணி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

## எமது கடமைப்பொறுப்பு

தேசிய இளைஞர் படையணியின் கடமைப்பொறுப்பாக காணப்படுவது யாதெனில், இளைஞர் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி மற்றும் தொழிற் கல்வி என்பனவாகும்.
இளைஞர் அபிவிருத்திக்கு முன்னணி மூலோபாயமாக இளைஞர்களுக்கு மத்தியில் வாழ்க்கைத்திறன் அபிவிருத்தி இளைஞர் படையணியினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## நிறுவனத்தின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் நலன்கள்

- ஆறு மாத கால பாடநெறியின் மூலம் ஒழுக்கம், தலைமைத்துவம் மற்றும் ஆளுமை ஆகியவற்றில் கவனம் செலுத்தி வாழ்க்கைத் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் இளைஞர் யுவதிகளிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்ற இளைஞர் யுவதிகளுக்கு தன்னம்பிக்கையுடன் தொழில்முறை மற்றும் அன்றாட வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள முடியும்.
- வாழ்க்கைத் திறன்களை வளர்த்துக் கொண்ட இளைஞர்களுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழிற் சந்தையில் தீர்க்கமாக வேலை செய்யும் திறன்.
- பயிற்சிப் பாடநெறிகள் மூலம் இசை, நாடகம் மற்றும் சொற்பொழிவு மற்றும் படைப்பாற்றல் போன்ற மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வாய்ப்பு.
- "Youth Cadet" உறுப்பினர்களுக்கு இலங்கையின் புகழ்பெற்ற புத்திஜீவிகளுடன் தொடர்புகொள்வதற்கும் அவர்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குதல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு உயர் சான்றிதழ்களை வழங்குதல். இதன் மூலம் தொடர்புடைய பாடங்களுக்கு உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கும்.
- தாய்மொழிக்கு மேலதிகமாக பிற மொழிகளையும் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் மற்ற மொழிகளைக் கற்கும் ஆர்வமும் பயிற்சியாளர்களிடம் வளர்க்கப்படுகிறது. (ஜப்பானிய, சீன)
- நாடு முழுவதிலும் உள்ள பயிற்சி நிலையங்களிலிருந்து, பயிற்சி நிலைய மட்டத்தில் தெரிவுசெய்யப்படும் உயர்திறமை வாய்ந்த 30 பயிலுனர்களுக்கு ஒவ்வொருவருக்கும் அதிகபட்சமாக ரூ.100,000.00 க்கு உட்பட்ட புலமைப்பரிசில்களுடன் வெளிவாரி தொழில்சார் பயிற்சி நிறுவனங்களுக்குப் பரிந்துரை செய்தல். (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- பாடநெறியின் ஆறு மாத காலப்பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறுபட்ட சமூக மற்றும் தன்னார்வ திட்டங்களில் பங்கேற்கும் "Youth Cadet" சமூக விழிப்புணர்வைப் பெற்று அறிவு மற்றும் அனுபவத்தில் சிறந்து விளங்குதல்.
- விளையாட்டுத் துறையில் திறமையும் ஆர்வமும் உள்ள இளைஞர்கள் தங்கள் கனவுகளை நனவாக்கி தேசிய மட்டத்தை அடைவதன் மூலம் அவர்களின் எதிர்கால இலக்குகளை அடைய ஒத்துழைப்பு வழங்கி ஊக்கப்படுத்துதல்.
- நடனம், இசை மற்றும் நாடகத் திறன்கள் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு நிபுணத்துவமுள்ள மற்றும் அனுபவம் வாய்ந்த ஆலோசனைக் குழுவின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு வருவதற்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- விவசாயம், சுயதொழில் போன்ற தொழில் முயற்சிகளில் அதிக ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் சிறு கைத்தொழில் மேம்பாட்டுப் பிரிவின் கீழ் அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள், நிதி ஒதுக்கீடு மற்றும் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டுதல்.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அவசர நிலைமைகளை சமாளிக்க தன்னம்பிக்கை மற்றும் உறுதியை வளர்த்தல்.
- சமுதாயத்தில் தேவைப்படுபவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு தேவையான மனோபாவத்தை உருவாக்குதல்.
- மாறிவரும் இளைஞர் தலைமுறைக்கு ஏற்ற பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து ஒத்துழைப்புக்களை உருவாக்குதல்.

## "Youth Cadet'' களுக்கு கிடைக்கும் நலன்கள்

1. வாழ்க்கைத்திறன் பயிற்சிப் பாடநெறியை இலவசமாக கற்பதற்கான சந்தர்ப்பம்
2. பாடநெறியை பூரணப்படுத்தும் போது "Youth Cadet" களுக்கு கிடைக்கும் சான்றிதழ்கள்

i. வாழ்க்கைத்திறன் சான்றிதழ்

ii. தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் சான்றிதழ்
iii. ஆங்கில மொழி பற்றிய உயர் சான்றிதழ்

} பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து

iv. வெளியிடப் பயிற்சி சான்றிதழ்

v. விசேட திறமைகள் மதிப்பீட்டுச் சான்றிதழ்

3. தொழிற் பயிற்சிக்காக ரூ.100,000.00 உட்பட்ட விதத்தில் புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) (பிணைமுறியொன்று கையொப்பமிடுதல் வேண்டும்)
4. தொழிற்துறைக்கு வழிகாட்டுதல்.
5. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம்.
6. பயிற்சிக் காலப் பகுதியில் பூரண காப்புறுதி கிடைக்கப்பெறல்.

## எமது கடப்பாடுகள்

| வழங்கப்படும் சேவை | இளைஞர் படையணி சட்டம், நிலையியற் கட்டளைகள் மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் | சேவையை வழங்கும் தரம் (மணி/வாரங்கள்/ நாட்கள்) | சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், மாதிரிப் படிவங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் | தங்களுக்கு உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமான உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|---|
| தேசிய இளைஞர் படையணி உத்தியோகத்தர்களின் நிறுவன நடவடிக்கைகள் | | | | |
| முதல் நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் சுயவிபரக் கோவையைப் பேணிவரல். | புதிய நியமனம் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பூர்த்தி செய்ய வேண்டிய ஆவணங்களை இரண்டு வாரங்களுக்குள் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். | தாபன விதிக்கோவை, நிதி ஒழுங்கு விதிகள், அரசாங்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | • நியமனக் கடிதம்<br>• நியமனத்தைப் பொறுப்பேற்கும் கடிதம்<br>• கடமைகளைப் பொறுப்பேற்றதாக அறிவிக்கும் கடிதம்<br>• சுய விபரத் தகவல் பத்திரம் (CV)<br>• பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)<br>• கல்வித் தகைமைகள்<br>• கல்விச் சான்றிதழ்கள்<br>• 157 ஆம் உறுப்புரை<br>• சத்தியப் பிரமாணம் (பொது 278)<br>• ஒப்பந்தம் (பொது 160)<br>• சொத்துக்கள் பொறுப்புக்கள்<br>• திருமணச் சான்றிதழ்<br>• தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதி<br>• சம்பளம் தயாரிப்பதற்குத் தேவையான ஆவணங்கள்<br>• ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவுசெய்வதற்கு ABH பத்திரம்<br>• சொத்துக்கள் பொறுப்புக்கள் பிரகடனம் (பொது 261)<br>• விவாகமானவரா விவாகமாகாதவரா என்பது பற்றி பிரகடனம்(பொது 176) | மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) 071-4957300<br><br>உதவிப் பணிக்காளர் நிர்வாகம் 0112 - 676019<br><br>நிர்வாக உத்தியோகத்தர் (மனித வளங்கள்) 011-2670281 |

| | | | | |
|---|---|---|---|---|
| தகுதிகூர்நிலைக் காலத்தின் இறுதியில் சேவையை உறுதிப்படுத்தல். | நிரந்தமாக்குவதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டிய நிபந்தனைகளை நிறைவேற்றல்.<br>1) நியமனத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனைத்து ஆவணங்களையும் பூரணப்படுத்தியிருத்தல்.<br>2) நியமனத்திற்கு ஏற்புடைய அடிப்படை தகைமைகள் சரியானவை என்பதை உறுதிப்படுத்தல்.<br>3) இரண்டு சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.<br>4) குற்றச்சாட்டுக்கள், தண்டனைகளைப் பெறாமல் இருத்தல்.<br>5) கடமை புறக்கணிப்பு, ஊக்கமின்மை தொடர்பில் முறைப்பாடுகள் இல்லாதிருத்தல். | இந்த ஆவணங்கள் மற்றும் சிபாரிசுகள் அடங்கிய கடிதங்களை தேவையான உத்தியோகத்தர்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள செலவாகும் காலம் 02 வாரங்கள் | நிரந்தரமாக்கும் படி கோரிக்கை கடிதம் நிரந்தரமாக்குவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய தடைதாண்டல்கள் இருப்பின் அது தொடர்பான விபரங்கள் | |
| சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொடுத்தல் | செயலாற்றுகை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | அனுமதியைப் பெற்றுக்கொள்ள செலவாகும் காலம் 02 வாரங்கள் | ஏற்புடைய மாதிரிப் படிவம் - பொது 232 ஐ பூரணப்படுத்தி சிபாரிசு மற்றும் அனுமதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். | |
| ஆளணிக்கு புலமைப் பரிசில் வழங்கல் | ஒரு பஞ்சாங்க மாதத்திற்கு முன்னர் புலமைப் பரிசில் பெற்றுக்கொள்ள எழுத்துமூல கோரிக்கை விடுத்தல் வேண்டும். | அனுமதியைப் பெற்றுக்கொள்ள செலவாகும் காலம் 02 வாரங்கள் | புலமைப் பரிசில் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை (தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல்.)<br>விண்ணப்பதாரி பாடநெறிக்கு பதிவுசெய்வதற்கு ஏற்புடைய ஆவணங்கள்<br>பாடநெறிக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஏற்புடைய பட்டியல்கள்<br>ஒப்பந்தம் | |
| EPF/ ETF நலன்களுக்கு விண்ணப்பித்தல் | EPF/ETF பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். | உரிய முறையில் பதவி விலகியிருப்பின் அன்றைய தினமே தேவையான படிவங்கள் பூரணப்படுத்தப்படும். | EPF/ETF விண்ணப்பப்படிவம், தே.அ.அ. பிரதி, வங்கிக் கணக்கின் பிரதி, ETF இறுதி கணக்கு கூற்று | |
| பதவி விலகல் | ஒரு பஞ்சாங்க மாதத்திற்கு முன்னர் எழுத்துமூலம் அறிவித்தல்.<br>உரிய முறையில் தடைநீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | பதவி விலகலை ஏற்றுக்கொண்டதாக ஒரு வார காலத்திற்குள் அறிவித்தல் | தடைநீக்கத்தை எழுத்துமூலம் சமர்ப்பித்து சிபாரிசைப் பெற்றுக்கொள்ளல் | |

| | | | | |
|---|---|---|---|---|
| பணிக்கொடை கொடுப்பனவு | தொடர்ச்சியாக 05 வருட சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தியிருத்தல் | தடைநீக்க நடவடிக்கையின் பின்னர் ஒரு மாதத்திற்குள் | முறையாக பதவி விலகல் கடிதம் பதவி விலகலை ஏற்றுக்கொண்டதாக வழங்கப்படும் கடிதம் பூரணப்படுத்தப்பட்ட தடைநீக்க அறிக்கை | |
| பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தாபன நடவடிக்கைகள் | | | | |
| பாடநெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பயிற்சியாளர்களின் சுயவிபரக் கோவை | பாடநெறிக்கு ஆட்சேர்க்கப்படும் பயிற்சியாளர்களின் ஆட்சேர்ப்பு விண்ணப்பப்படிவத்தில் குறிப்புக்கள் மற்றும் ஆவணங்களைப் பூரணப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். | சுயவிபரக் கோவையை இற்றைப்படுத்த முடியுமான காலம் - 01 வாரம் | ● ஆட்சேர்ப்பு படிவம்<br>● கல்விச் சான்றிதழ்களின் உண்மைப் பிரதிகள்<br>● பிறப்புச் சான்றிதழின் பிரதி<br>● புகைப்படங்கள் இரண்டு<br>● பாடசாலையிலிருந்து விலகிச் செல்லும் சான்றிதழ்<br>● கிராம அலுவலர் சான்றிதழ்<br>● தேசிய அடையாள அட்டையின் பிரதி | மேலதிகப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) 071-4811859<br>உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) 011-2670378<br>உதவிப் பணிப்பாளர் (சப்பிரகமுவ மாகாணம்) 033-2215863<br>உதவிப் பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்) 026-3135885<br>உதவிப் பணிப்பாளர் (ஊவா மாகாணம்) 057-2052393<br>உதவிப் பணிப்பாளர் (வடக்கு மாகாணம்) 024-2054751<br>உதவிப் பணிப்பாளர் (மேல் மாகாணம்) 033-2215863<br>உதவிப் பணிப்பாளர் (வட மத்திய மாகாணம்) 025-2264180<br>உதவிப் பணிப்பாளர் (தென் மாகாணம்) 047-2257243<br>உதவிப் பணிப்பாளர் (மத்திய மாகாணம்) 081-2077158<br>உதவிப் பணிப்பாளர் (வடமேல் மாகாணம்) 037-2268980 |

| | | | | |
|---|---|---|---|---|
| **விரிவுரை மண்டபம் மற்றும் விளையாட்டு மைதான வசதிகளைப் பெற்றுக்கொள்ளல்** | | | | |
| விரிவுரை மண்டப வசதிகள் | வசதிகளை வழங்கும் ஆற்றலைப் பரிசோதித்து அறிவித்தல்.<br>நிறுவனத்தில் சேகரிக்கும் கணக்கு<br>கணக்கு இலக்கம் - 7040885 - BOC டொரின்டன் கிளை (453)<br>கணக்கின் பெயர் : தலைவர், தேசிய இளைஞர் படையணி<br>மேற்படி கணக்கிற்கு பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டின் பிரதியை finance@youthcorps.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். | விண்ணப்பித்த திகதயில் எழுத்து மூலம் அறிவித்தல் | எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய சமர்ப்பிக்கும் வரையில் தொலைபேசி ஊடாக அறிவித்தல் | மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)<br>071-4957300<br><br>உதவிப் பணிப்பாளர் (அனைத்து மாகாணங்களும்)<br>நிலைய பொறுப்பதிகாரி |
| **ஏனைய பாடநெறிகளுக்கு பயிற்றுவித்தல் (தனிப்பட்ட ஒதுக்கீடுகளின் மீது / வசதியளிக்கும் நடவடிக்கைகளுக்காக)** | | | | |
| வெளித்தரப்பினர்களின் கோரிக்கைக்கு அமைய வேறு பாடநெறிகளை நடத்துதல் | தனது தேவைகளை பணிப்பாளர் / தலைவருக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்தல் | பயிற்சியைக் கோரும் தரப்பினர்களின் தேவைப்பாட்டுக்கு அமைய காலம் தீர்மானிக்கப்படும். (½, நாட்கள் 14 நாட்கள், 03 மாதங்கள்) | பயிற்சித் தேவைப்பாட்டுக் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளல்<br>தலைவர் / பணிப்பாளரின் அனுமதிக்கு சமர்ப்பித்தல்<br>பயிற்சிப் பிரிவினால் ஏற்புடைய தரப்பினர்களுக்கு எழுத்துமூலம் அறிவித்தல்<br>ஆட்சேர்ப்பு<br>கோரிக்கைக்கு அமைய நடைமுறைப்படுத்தல்<br>மேற்பார்வை செய்தல் மற்றும் பின்னூட்டல் செய்தல் | மேலதிகப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி)<br>071-4811859<br><br>உதவிப் பணிப்பாளர் (பயிற்சி)<br>011-2670378 |
| **ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பிரச்சாரம் செய்தல்** | | | | |
| சமூக ஊடகத்தைப் பயன்படுத்தி ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல்<br><br>களத்திற்குச் சென்று அறிவூட்டல் | பயிற்சிப் பிரிவின் கோரிக்கைக்கு அமைய ஊடகப் பிரிவினால் சமூக ஊடகங்கள் ஊடக அறிவுறுத்தல்<br><br>அந்தந்த நிலையங்களினால் சமூகங்களை அறிவூட்டல் | ஆட்சேர்க்கப்பட்ட பாடநெறி நிறைவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் இருந்து மேற்கொள்ளப்படும்<br><br>பாடநெறி ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் சமூகத்தை அறிவூட்டும் செயற்பாடு மாகாண அலுவலகங்கள் மற்றும் நிலையங்கள் மட்டத்தில் மேற்கொள்ளல்<br><br>அரச வர்த்தமானியில் ஆட்சேர்ப்புக்கு ஒரு மாத காலத்திற்கு முன்னர் வெளியிடப்படும். | பாடநெறிகளின் விபரங்கள் அடங்கிய வீடியோ படங்கள்<br><br>தொலைக்காட்சி மூலம் அறிவுறுத்தல்<br><br>அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்<br><br>போஸ்டர் / பதாகை / துண்டுப் பிரசுரங்கள்<br><br>பயிலுநர்கள் ஊடக | மேலதிகப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி)<br>071-4811859<br><br>உதவிப் பணிப்பாளர் (பயிற்சி)<br>011-2670378<br><br>ஊடக பிரிவுத் தலைவர்<br>011 -2688885 / 283<br>077-2010439 |
| இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளல் | பயிற்சிப் பிரிவின் கோரிக்கைக்கு அமைய ஊடகப் பிரிவினால் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலான அறிவூட்டல் | பாடநெறி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்தல் | அச்சு ஊடக அறிவித்தல்கள்<br>வானொலி விளம்பரங்கள்<br>தொலைக்காட்சி நேர்முகப் பரீட்சைகள் | |

# தங்களுக்கு சேவை வழங்கும் எமது நிறுவனங்கள்

## தேசிய இளைஞர் படையணி தலைமையகம்

முகவரி :- தேசிய இளைஞர் படையணி தலைமையகம்,
இல.420,பௌத்தாலோக்க மாவத்தை,கொழும்பு 07.
தொலைபேசி இலக்கம் :- 011-2688885

## தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள்

| இல | மாகாணம் | மாவட்டம் | பயிற்சி நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | மேல் | கொழும்பு | இராஜகிரிய | பண்டாரநாயக்கபுர, இராஜகிரிய. | 071 0491784 |
| 2 | | கம்பஹா | அத்தனகல்ல | வத்துபிட்டிவல, அத்தனகல்லை, நிட்டம்புவ | 033 2282232 |
| 3 | | | திவுலபிட்டிய | வல்பிட்ட, திவுலபிட்டிய | 033 2272875 |
| 4 | | | கட்டுநாயக்க | தம்மாலோக்க மாவத்தை, வலானை, கட்டுநாயக்க | 011 2260020 |
| 5 | | | யக்கல | வெரெல்லவத்தை, யக்கலை, கம்பஹா. | 033 2233534 |
| 6 | | களுத்துறை | புலத்சிங்கள | தேசிய இளைஞர் படையணி நிலையம் புலத்சிங்கள | 034 2282322 |
| 7 | மத்திய | கண்டி | செங்கடகல | சிறிமல் உயன, ஒகஸ்வத்தை, கண்டி | 081 2389134 |
| 8 | | | யட்டிநுவர | முருதலாவ வீதி, தெஹிதெனிய | 081 2410026 |
| 9 | | | கம்பளை | நாவலப்பிட்டி வீதி, குடாமாகே, கம்பளை | 081 2078177 |
| 10 | | நுவரெலியா | நுவரெலியா | மீபிலிமான, அம்பேவலை, நுவரெலியா | 052 2237416 |
| 11 | | | வலப்பனை | ஹரஸ்பெத்த, வலப்பனை | 052 2050010 |
| 12 | | மாத்தளை | நாஉல வெளியிடப் பயிற்சி நிலையம் | அரங்கலை, நாஉல | 066 2246225 |
| 13 | | | நாஉல | அரங்கலை, நாஉல | 066 2246204 |
| 14 | | | தம்புள்ளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை | இனாமலுவ, தம்புள்ளை | 066 2286177 |
| 15 | தென் | காலி | காலி | வெகுணுகொட வீதி, போப்பே, காலி | 091 2233182 |
| 16 | | | அக்மீமன | சீன நட்புறவு கிராமம், குருந்துவத்தை, அக்மீமன | 091 3121736 |
| 17 | | | நெலுவ | அம்பலேகெதர, நெலுவ | 091 3098911 |
| 18 | | மாத்தறை | அகுரஸ்ஸ | மாரம்ப, அக்குரஸ்ஸ | 041 3131216 |
| 19 | | | திக்வெல்ல | ஊருகமுவ, திக்வெல்லை | 041 2255055 |
| 20 | | ஹம்பந்தோட்டை | சூரியவெவ | வெனிவெல்ஆர, சூரியவெவ | 047 3133800 |
| 21 | | | வீரவில | திஸ்ஸபுர, வீரவில | 047 3128444 |
| 22 | | | லுனுகம்வெஹர | லுனுகம்வெஹர, | 047 2239292 |
| 23 | | | வீரகெட்டிய | நைகல, ஹகுருஎல, வீரகெட்டிய | 047 2257143 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | கிழக்கு | திருகோணமலை | குச்சவேலி | சலபை ஆறு, குச்சவெளி | 026 2228709 |
| 25 | | | சேருவிலை | சிறிதுவ, சேருவில | 026 4549439 |
| 26 | | | கோமரண்கடவல | வில்பனாகுழம், கெமுனுபுர, கோமரண்கடவல | 026 4549428 |
| 27 | | | திருகோணமலை | சர்தாபுர, சீனக்குடா | 026 4549432 |
| 28 | | அம்பாறை | தெஹிஅத்தகண்டிய | லிஹினியாகம, தெஹிஅத்தகண்டிய | 027 2056723 |
| 29 | | | அம்பாறை | கோட்டக் கல்வி அலுவலகம், உஹன வீதி, அம்பாறை | 063 2224810 |
| 30 | | மட்டகளப்பு | வாழைச்சேனை | 14ஆம் மைல்கல், பலமுதிர்ச்சோலை வீதி, கல்குடா, வாழைச்சேனை. | 065 3121085 |
| 31 | வட மத்திய | பொலன்நருவை | மெதிரிகிரிய | புதிய நகரம், மெதிரிகிரிய | 027 2050477 |
| 32 | | அநுராதபுரம் | கெக்கிராவை | மகவலிபெத்த, ஒலுகரந்த, கெக்கிராவை | 025 2263297 |
| 33 | | | கலாவெவ | கல்நேவ, பூல்நேவ, கலாவெவ | 025 2269946 |
| 34 | | | கலென்பிந்துனுவெவ | யகல்ல, கலென்பிந்துனுவெவ | 025 2258355 |
| 35 | | | அநுராதபுரம் | பாலடிகுளம், அநுராதபுரம் | 052 3852809 |
| 36 | வடக்கு | | மன்னார் | மன்னார் | 023 2251917 |
| 37 | | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | வட்டுவாய்க்கால், முல்லைத்தீவு | 021 2290428 |
| 38 | | வவுனியா | வவுனியா | இரட்டைப் பெரியகுளம், வவுனியா | 024 2054558 |
| 39 | வடமேல் | குரணாகல் | அலவ்வ | வில்கமுவ, வென்னொருவ, அலவ்வை | 037 2067885 |
| 40 | | | பண்டுவஸ்நுவர | நுகவெல சந்தி, துத்திரிபிட்டிகம, பண்டுவஸ்நுவர | 037 2291803 |
| 41 | | | தொடம்கஸ்லந்த | அலகொலமட, மதுராகொட, தொடம்கஸ்லந்த | 037 2252655 |
| 42 | | | மாவத்தகம | டொன்வோர் தோட்டம், மாவத்தகம | 037 2298668 |
| 43 | | | வாரியபொல | நீதிமன்ற வீதி, வாரியபொல | 037 2268375 |
| 44 | | | நாத்தாண்டிய | சாகரகம, நாத்தண்டிய | 032 2050815 |
| 45 | | புத்தளம் | வென்னப்புவ | ரனவிரு கமலசிறி மாவத்தை, போலான, வைக்கால | 031 2277199 |
| 46 | | | குளியாப்பிட்டிய | தெகம்மெத்த, வெவகம, குளியாபிட்டிய | 037 2283680 |
| 47 | ஊவா | இரத்திணபுரம் | எம்பிலிபிட்டிய | "கம்உதா' பூமி, யோதகம, எம்பிலிபிட்டிய | 047 2262399 |
| 48 | | | பலாங்கொடை | பட்டுகம்மன, பலாங்கொடை | 045 3129898 |
| 49 | | | நிவித்திகல | அம்பலந்தெனி, வட்டபொத்த வீதி, நிவித்திகல | 045 2279970 |
| 50 | | கேகாலை | கலிகமுவ | அசிதெனிய, கலிகமுவ நகரம், கலிகமுவ | 035 2282993 |
| 51 | | | தெஹிஓவிட்ட | கனன்கம, தெஹிஓவிட்ட | 036 2267671 |
| 52 | | | கேகாலை | கங்கொடவத்தை, கேகாலை | 035 2223260 |
| 53 | | பதுளை | மஹியங்கனை | மாபாகடவெவ, மகியங்கனை | 055 2257118 |
| 54 | | | பண்டாரவளை | பிந்துனுவெவ, பண்டாரவளை | 057 2222214 |
| 55 | | மொணராகலை | மொணராகலை | அரசாங்க அதிபர் வாசஸ்தளத்திற்கு அண்மையில், ஹ/லன்தாவை, மொணராகலை | 055 2055741 |
| 56 | | | வெள்ளவாய | யாலபோவ, வெல்லவாய | 055 2274157 |
| 57 | | | தணமல்வில | சர்வோதய நிலைய வீதி, தணமல்விலை | 047 3220529 |
| 58 | | | சியம்பலாண்டுவ | மஹகலுகொல்ல, பொத்துவில் வீதி, சியம்பலாண்டுவ | 070 3538292 |

## எமது எதிர்பார்ப்பு

எமது சேவைக்காக தாங்கள் சமர்ப்பிக்கும் கோரிக்கை சட்டரீதியான, நியாயமான மற்றும் உரிய நேரத்திற்கு சமர்ப்பிப்பதன் மூலமும் முழுமையான அங்கசம்பூர்ணமான சரியான தகவல்கைள வழுங்குவதன் மூலம் எங்களிடமிருந்து எதிர்பார்க்கும் மற்றும் எதிர்பார்க்க முடியாத விடயங்கள் தொடர்பில் போதியளவு புரிதலை பெற்றிருப்பதன் மூலம் தங்களுக்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும் என்பதையும் தயவன்புடன் அறியத்தருகின்றோம்.

## எமது தரநியமங்கள்

✓ தங்களிடமிருந்து கிடைக்கும் அனைத்து எழுத்துமூலமான கோரிக்கைக்கும் துரிதமாக பதில் அளிக்கப்படும். (இறுதி பதில் அனுப்ப முடியாத போது ஒரு வாரத்திற்குள் கடிதம் கிடைக்கப்பெற்றது தொடர்பில் அறிவிக்கப்படும் மற்றும் நான்கு (04) வாரங்களுக்குள் இறுதி பதில் தங்களுக்கு அனுப்பப்படும்)

✓ அதே போன்று மின்னஞ்சல் ஊடாக கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு அன்றைய தினமே பதில் அளிக்கப்படுவதோடு, அவ்வாறு பதில் அளிக்க முடியாத போது கடிதம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். நியாயமான காலப் பகுதிக்குள் இறுதி பதில் அளிக்கப்படும்.

✓ அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் தொலைபேசி அழைப்புக்களுக்கு அந்த சந்தர்ப்பத்திலேயே பதில் அளிக்கப்படுவதோடு, பதில் அளிக்க முடியாத போது ஏற்புடைய உத்தியோகத்தர்களினால் நியாயமான காலப்பகுதிக்குள் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

✓ தாங்கள் கோரும் சேவையை நாம் அறிவித்துள்ள காலப்பகுதிக்குள் தங்களுக்கு வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

✓ இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு தாமதம் நிகழும் போது அல்லது கட்டாயமாக தாமதம் ஏற்படும் போது அல்லது பிரச்சினைக்குரிய சந்தர்ப்பமொன்றில் அதற்கான காரணம் தங்களுக்கு துரிதமாக அறிவிக்கப்படும்.

## முறைப்பாடுகள் மற்றும் நிவாரணம் வழங்கும்

எமது நிறுவனத்தின் ஆளணி உத்தியோகத்தர்களினால் மரியாதையுடன் தங்களுக்குத் தேவையான சேவைகள் வழங்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட தரநியமங்கள் தொடர்பில் தங்களுக்கு ஏதும் முறைப்பாடுகள் இருப்பின் பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்க முடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| பெயர் | :- | பிரிகேடியர் ஆர்.எம்.எஸ்.பி.ரத்நாயக்க யுஎஸ்பி பிஎஸ்சி ஐஜீ |
| பதவி | :- | பணிப்பாளர் |
| அமைந்துள்ள இடம் | :- | தேசிய இளைஞர் படையணி தலைமையகம் |
| தொலைபேசி / தொலைநகல் / மின்னஞ்சல் | :- | 071-8550554 / director@youthcorps.lk |

| | | |
|---|---|---|
| பெயர் | :- | சட்டத்தரணி ஆர். நிஷாந்த புஷ்பகுமார |
| பதவி | :- | மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) |
| அமைந்துள்ள இடம் | :- | தேசிய இளைஞர் படையணி தலைமையகம் |
| தொலைபேசி / தொலைநகல் / மின்னஞ்சல் | :- | 071-4957300 / adlaf@youthcorps.lk |

| | | |
|---|---|---|
| பெயர் | :- | சமன் குலசூரிய |
| பதவி | :- | மேலதிகப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் அபிவிருத்தி) |
| அமைந்துள்ள இடம் | :- | தேசிய இளைஞர் படையணி தலைமையகம் |
| தொலைபேசி / தொலைநகல் / மின்னஞ்சல் | :- | 071-4811859 / adltd@youthcorps.lk |

அனைத்து முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றதாக 03 நாட்களுக்குள் அறிவிக்கப்படும், இறுதி பதில் 07 நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.

பெயர் குறிக்கப்பட்ட உத்தியோகத்தர் :- பிரிகேடியர் ஆர்.எம்.எஸ்.பி.ரத்நாயக்க யுஎஸ்பி பிஎஸ்சி ஐஜீ

## நேரடியாக தகவல் வழங்கும் உத்தியோகத்தர்கள்

பணிப்பாளர்
இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07
011-2697622 / 071-8550554
director@youthcorps.lk

தகவல் உத்தியோகத்தர் :- சட்டத்தரணி ஆர். நிஷாந்த புஷ்பகுமார
மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)
இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07
071-4957300
adlaf@youthcorps.lk

டி.எம்.ரி.எம். ரணசிங்க
உதவிப் பணிப்பாளர் (செயற்படுத்தல்)
இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07
011-3152664 / 071-4957340
adoperation@youthcorps.lk

சேவைப் பெறுநர்களான பொதுமக்களாகிய தங்களது யோசனைகளை நாம் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்கின்றோம்.

அ) எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் தாங்கள் அல்லது தங்களது பிரதிநிதிகளுடன் நாம் அடிக்கடி கலந்துரையாட விரும்புகின்றோம். நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ள விரும்பும் போது தயவுசெய்து 011-2688885 தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கவும்.

ஆ) இந்தப் பட்டயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களது கருத்துக்கள் மற்றும் யோசனைகளை முன்வைக்க விரும்புமிடத்து அது தொடர்பில் விருப்பத்தை தெரிவித்து தங்களது விபரங்களை எமது info@youthcorps.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆ) தங்களது கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்கவும்.

தேசிய இளைஞர் படையணி தலைமையகம்
இல. 420,
பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07

எமது நிறுவனம் பற்றிய தகவல்களை www.youthcorps.lk இணையத்தளத்தின் ஊடகப் பெற்றுக்கொள்ள முடியும். பிரஜைகள் பட்டயம் என்பது நாம் வழங்கும் சேவைகளின் தரத்தை விருத்தி செய்வதற்காக நீங்கள் எம்முடன் இணைந்து செயலாற்றும் ஒன்றிணைந்த செயற்பாடாகும். வழங்கப்படும் சேவையை மேலும் விருத்தி செய்வதற்கு தங்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் இன்றியமையாதவை.

**பட்டயத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளை அடிக்கடி திருத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.**